I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.3
M.C.O.P.NO.478/2018

| | | |
|---|---|---|
| Name | : | Madhavan |
| Father Name | : | Narasimman |
| Age | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.10.2025

**விசாரணை தொடங்கிய நேரம் : 03.00 p.m**

**இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்**

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன்ஸ் வந்தது. நான் அம்பால் ஏஜென்சியில் பணி செய்து வருகிறேன். நான் manager incharge ஆக இருக்கிறேன். எனக்கு சாட்சியம் அளிக்க அதிகார கடிதம் கொடுத்துள்ளார். (அந்த கடிதம் ம.சா.ஆ– 40). எங்கள் நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் தான். எங்கள் கம்பனியில் கிருஷ்ணன் என்பவர் 2015 ல் வேலைக்கு சேர்ந்தார். அவர் 1.5 வருடங்களாக எங்கள் கம்பனியில் வேலை பார்த்தார். எங்கள் நிறுவனத்தில் அவர் cleaning supervisor ஆக வேலை பார்த்தார். அவர் அப்படி அங்கு வேலை செய்தார் என்பதை நிருபிக்க எதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஏற்கனவே VIT ல் வேலை பார்த்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் ம.சா.ஆ. 12 என்றால் சரிதான்.

அந்த சான்றில் அவர் மனைவி insurance claim க்காக கோரப்பட்டதாகவும் அதற்காக இந்த சான்று வழங்கப்பட்டுள்ளதாகவும்

உள்ளது என்றால் சரிதான், அவருக்கு மாதம் சம்பளமாக அவருக்கு ரூ.10,287/- கொடுக்கப்பட்டது. அவருக்கு பிடித்தம் சுமார் 1000/- போக மீது net salary ஆக வாங்கியருப்பார். அவர் contract employee. வருடம் ஒரு முறை புதுப்பிக்கப்படும். அவர் contract ல் வேலை செய்தார் என்ற சான்று தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. அவருடைய bonafide certificate ல் அவருடைய PF, Gratuity details காட்டியிருக்கிறோமா என்றால் அதில் காட்டவில்லை. விபத்து சமயத்தில் அவருக்கு வயது 49. அவருக்கு சம்பளம் வங்கி கணக்கு மூலமாக தான் வழங்கினோம். அவருடைய இந்தியன் வங்கி கணக்கு எண் 993476987. அவருக்கு இவ்வளவு சம்பளம் கொடுத்தோம் என்பதற்கு வங்கி கணக்கு அறிக்கை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

அவருடைய வியாபார கணக்கிலிருந்து அவர் மனைவி கேட்டுகொண்டதால் இவ்வாறு அடிப்படை ஆவணம் எதுவும் இல்லாமல் சான்று வழங்கினோம் என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 12 என்ற ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றாலும் எனவே அதை சாட்சியமாக ஏற்று கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம் :** 03.10 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2025.10.14 18:50:03 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.